

பல்லாவரம் மண்டல அலுவலகத்தில் தாம்பரம் மாநகராட்சி சார்பில் பேரிடர் மீட்பு உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர், ச.அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், மண்டல குழு தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, து.காமராஜ், சு.இந்திரன் பகுதிச் செயலாளர் இ.எஸ்.பெர்னாட் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## 2024 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு

# 15 காவல் துறை அதிகாரிகளுக்கு சிறப்புப் பதக்கங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை,ஆக.15-

புலன் விசாரணைப் பணியில் மிகச்சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும் கீழ்கண்ட 10 காவல் துறை அதிகாரிகள் 2024ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதலமைச்சரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப்பணிப் பதக்கங்கள் வழங்கப்பட தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்:

திருமதி.கி.புனிதா, காவல் ஆய்வாளர், சைபர் கிரைம் காவல் நிலையம், வேலூர் மாவட்டம்

து. வினோத்குமார், காவல் ஆய்வாளர், சைபர் கிரைம் பிரிவு, மத்திய குற்றப்பிரிவு, சென்னை.

செல்வி.ச.செளமியா, காவல் துணை கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, கடலூர் மாவட்டம்.

திருமதி.ஐ.சொர்ணவள்ளி, காவல்ஆய்வாளர், சைபர் கிரைம் காவல் நிலையம், திருப்பூர் மாநகரம்.

திருமதி. நா. பார்வதி, காவல் ஆய்வாளர், குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

திருமதி.பெ.ராதா, காவல் ஆய்வாளர், குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, திருப்பூர்.

செ.புகழேந்தி கணேஷ், காவல் துணை கண்காணிப்பாளர், செங்கல்பட்டு உட்கோட்டம்,

செங்கல்பட்டு மாவட்டம்.

திருமதி. இரா.தெய்வராணி, காவல் ஆய்வாளர், பெருந்துறை காவல் வட்டம், ஈரோடு மாவட்டம்.

திருமதி. ஆ. அன்பரசி, காவல் ஆய்வாளர், பொன்னை காவல் நிலையம், வேலுார் மாவட்டம்.

நா.சுரேஷ், துணை காவல் கண்காணிப்பாளர், ஊரக உட்கோட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

இதே போன்று பொதுமக்களின் சேவையில் தன்னலம் கருதாமல் சிறப்பாக செயல்பட்டு சீரிய பணியாற்றிய கீழ்கண்ட 5 காவல் துறை அதிகாரிகளுக்கு 2024ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர்களது பணியைப் பாராட்டி சிறந்த பொதுச் சேவைக்கான தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்படும்:

தா.ச. அன்பு.

காவல் துறை தலைவர்,

குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுதுறை, சென்னை.

இ.கார்த்திக்,

காவல் கண்காணிப்பாளர்I,

தனிப் பிரிவு குற்றப்புலனாய்வு துறை, சென்னை.

சி.ர.பூபதிராஜன்,

துணைக் காவல் கண்காணிப்பாளர்,

தனிப் பிரிவு குற்றப்பபுலனாய்வுத் துறை, சேலம் சரகம்.

க.சீனிவாசன்,

காவல் ஆய்வாளர் (தொ.நு.),

காவல் தொலைத்தொடர்பு பிரிவு, சென்னை.

பு.வ. முபைதுல்லாஹ்,

காவல் உதவி ஆய்வாளர்,

உள்வட்ட பாதுகாப்பு பிரிவு, அயல்பணி திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவு பிரிவு, தலைமையகம், சென்னை.

விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு கிராம் எடையுடன் கூடிய தங்கப்பதக்கமும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படும். மேற்கண்ட விருதுகள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.

## கல்வி தரவரிசைப் பட்டியலில் முன்னிலை!

# ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனை!

## தினகரன் நாளேடு தலையங்கத்தில் புகழாரம்!

சென்னை,ஆக.15-

கல்வித் தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு முன்னிலை வகித்து வருவது திராவிட மாடல் ஆட்சியின் மகத்தான சாதனை என்று தினகரன் நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.



தினகரன்

தமிழ்நாட்டின் சாதனை

கல்விதான் யாராலும் பறிக்க முடியாத சொத்து. இந்த வார்த்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கடி உச்சரிக்கும் ஒன்று. எந்த நிகழ்ச்சி என்றாலும் மாணவர்களை, பெற்றோர்களை ஊக்குவிக்க அவர் முன்னெடுக்கும் முயற்சி இது. மன்னார்குடியை சேர்ந்த தூய்மைப்பணியாளரின் மகளான துர்கா திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் கரங்களால் அந்த பணி ஆணையை பெற்றவர் உணர்ச்சி பொங்க தன் தந்தையை நினைத்து உருகினார்.

என்னுடைய அப்பா நல்ல சட்டை போட்டது கிடையாது, நல்ல வேஷ்டி கட்டியது கிடையாது, நல்ல செருப்பு அணிந்தது கிடையாது. எப்போதும் காக்கி உடையில் தான் இருப்பார். நான் நல்லா இருக்கணும், நல்லா படிக்கணும்; என் பொண்ணு நான் பட்ட கஷ்டத்தை படக்கூடாது என நினைத்து அதற்காக நிறைய என் அப்பா இழந்துள்ளார். அவர் இந்த தருணத்தில் இருந்து இருந்தால் நல்லா இருந்து இருக்கும்; அவர் 7 மாசத்திற்கு முன்பு தவறி விட்டார் என்ற துர்காவின் உருக்கமான பேட்டி கல்வி தான் ஒருவரை இந்த உலகத்தில் உயர்த்தும் என்பதை தெளிவாக காட்டியது.

அவரது பேட்டியை பார்த்த முதல்வர் மு.க.ஸ்டாலின்,’ நகராட்சி ஆணையராக பொறுப்பேற்கும் துர்காவின் பேட்டியை கேட்டு அகமகிழ்ந்தேன். கல்வி தான் ஒரு தலைமுறையையே முன்னேற்றிடும் ஆற்றல் பெற்றது என்பதற்கு துர்காவே எடுத்துக்காட்டு; நான் மீண்டும் சொல்கிறேன் ‘கல்வி தான் யாராலும் பறிக்க முடியாத சொத்து’ என்று தனது டிவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதேபோல் தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களும் தேசிய பட்டியலில் உயர்ந்த இடத்தை பிடித்து சாதித்து உள்ளன.

தொடர்ந்து 6வது முறையாக சென்னை ஐஐடி முதலிடத்தில் உள்ளது. கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி, புதுமை நடைமுறை, மாணவர்களின் கல்வித்தரம் உள்ளிட்ட அடிப்படையில் இந்த பட்டியல் தயாரிக்கப் பட்டு ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டது. அதில் சென்னை ஐஐடி சாதித்து உள்ளது. பல்கலைக்கழகங்கள் பட்டியலில் கோவை அமிர்தவிஸ்வ வித்யாபீடம் 7வது இடத்தை பிடித்து இருக்கிறது. 10வது இடத்தில் வேலூர் விஐடி உள்ளது. மாநில பொது பல்கலைக்கழகங்கள் பட்டியலில் முதல் இடத்தை சென்னை அண்ணா பல்கலைக்கழகம் பிடித்து உள்ளது. இந்த பட்டியலில் 8வது இடத்தை கோவை பாரதியார் பல்கலைக்கழகம் பிடித்து உள்ளது.

பொறியியல் கல்லூரிகளில் சென்னை ஐஐடி முதல் இடத்தையும், திருச்சி என் ஐடி 9வது இடத்தையும் பிடித்து சாதித்து உள்ளன. மருத்துவ கல்லூரிகள் தரவரிசை பட்டியலில் வேலூர் சிஎம்சி 3வது இடத்தையும், கோவை அமிர்தா விஸ்வ வித்யாபீடம் 8வது இடத்தையும், சென்னை மருத்துவ கல்லூரி 10வது இடத்தையும் பிடித்து அசத்தி உள்ளன. பல் மருத்துவ பிரிவில் சென்னை சவீதா கல்லூரி முதல் இடத்தையும், சென்னை எஸ்ஆர்எம் பல் மருத்துவ கல்லூரி 7வது இடத்தையும், சென்னை ராமச்சந்திரா கல்லூரி 10வது இடத்தையும், பார்மசி படிப்பில் ஊட்டி ஜேஎஸ் எஸ் பார்மசி கல்லூரி 4வது இடத்தையும், வேளாண்மை பிரிவில் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலை 6வது இடத்தையும் பிடித்து உள்ளன.

இப்படி நாடு முழுவதும் கல்வி தரவரிசை பட்டியலில் தமிழ்நாடு சாதித்து உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள் தரமான கல்வியை கற்றுக்கொடுப்பதுடன், தரமான மாணவர்களை உருவாக்குவதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு தூய்மைப்பணியாளரின் மகள், தனது கல்வியால் நகராட்சி ஆணையராக பணி நியமனம் பெறும் வகையில் தமிழ்நாட்டின் கல்வி தலைசிறந்த கல்வியாக மாற்றப்பட்டுள்ளது. இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வயநாட்டில் ஆற்றைக் கடந்து சிகிச்சை அளித்த கூடலூர்

# செவிலியர் சபீனாவுக்கு கல்பனா சாவ்லா விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,ஆக.15-

**வயநாட்டில் ஆற்றைக் கடந்து சிகிச்சை அளித்த கூடலூரைச் சேர்ந்த செவிலியர் சபீனாவுக்கு இவ்வாண்டு க்கான கல்பனா சாவ்லா விருது வழங்கப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

வயநாடு நிலச்சரிவில் சிக்கியவர்களுக்கு தமிழகத்தின் கூடலூரைச் சேர்ந்த செவிலியர் சபீனா ஜிப்லைன் மூலம் ஆற்றைக் கடந்து சென்று சிகிச்சை அளித்தது குறித்த குறும்படம் ஒளிபரப்பப்பட்டது.



செவிலியர் சபீனாவின் இந்த வீர செயலுக்காக அவருக்கு தொடர்ந்து பாராட்டுகள் குவிந்து வருகிறது. இந்நிலையில், தமிழக செவிலியர் சபீனாவுக்கு, வீர தீர செயலுக்கான கல்பனா சாவ்லா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

செவிலியர் சபீனாவுக்கு, விருதினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் வழங்க உள்ளார்.

வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தனது உயிரையும் பொருட்படுத்தாமல், துணிச்சலாக செயல்பட்டு சிகிச்சை அளித்தமைக்காக சபீனாவுக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையில்

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம் - பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள்!

## கே.என்.அருண் நேரு எம்.பி.- ம.பிரபாகரன் எம்.எல்.ஏ. பெற்றனர்!

பெரம்பலூர், ஆக,15 -

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர்!

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை காந்தி மஹாலில் வேப்பந்தட்டை மற்றும் அன்னமங்கலம் ஊரட்சியைச் சேர்ந்த கிராம மக்களுக்கான “மக்களுடன் முதல்வர்” திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என். அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர். முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்க ளில் ஒன்றான மக்களுடன் முதல்வர் என்ற சிறப்புத் திட்டத்தின் கீழ் பொது மக்கள் வசிக்கும் இடங்களுக்கே அரசு அலுவலர்கள் நேரில் சென்று கோரிக்கை மனுக்கள் பெற்று அதற்கு தீர்வு காணும் ஒரு உன்னத திட்டமான இத்திட்டம் பெரம்பலூர் மாவட்டத்தில் நகரப்பகுதிகள், பேரூராட்சிகளில் ஏற்கனவே நடைபெற்று முடிவடைந்த நிலையில், தற்போது ஊரகப் பகுதிகளுக்கு விரிவு படுத்தப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.07.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், வேப்பந்தட்டை வட்டத்தில் அன்னமங்கலம் மற்றும் வேப்பந்தட்டை ஊராட்சி கிராம மக்களுக்காக நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என். அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் பார்வையிட்டு, பொதுமக்களிடம் கோரிக்கை தொடர்பாக கேட்டறிந்து, மனுக்கள் பெற்றும் தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி மனு மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

பின்னர், மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் அனைத்துத்துறைகளின் வாயிலாக அமைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் தொடர்பான அரங்குகளை அனைவரும் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் குறித்து விழிப்பு ணர்வு ஏற்படுத்திடவும் கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினர். இன்றைய முகாமில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 270 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இதில் வேப்பந்தட்டை ஒன்றியக்குழுத்தலைவர் க.ராமலிங்கம், வேப்பந்தட்டை வட்டாட்சியர் மாயகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் தழுதாழை.பாஸ்கர், ஊராட்சி மன்ற தலைவர்கள் தனலட்சுமி கலியமூர்த்தி (வேப்பந்தட்டை), மருதாம்பாள் செல்வகுமார் (அன்னமங்கலம்) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்,



சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் கூட்டத்தில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் சிறப்புரையாற்றினார். உடன் கழக சிறுபான்மையினர் நல அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில்

# இலவச தொழிற் பயிற்சியில் சேருவதற்கு விண்ணப்பங்கள்!

சென்னை,ஆக.15-

பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் 2024-25ஆ-ம் கல்வியாண்டில் இலவச தொழிற் பயிற்சியில் சேருவதற்கு அனுமதிக்கப்பட்ட 184 இடங்களில்

13.08.2024 வரை 102 இடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பயிற்சியில் சேர விரும்பும் மாணவர்கள் 31.08. 2024க்குள் விண்ணப்பித்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சென்னை பள்ளிகளில் படித்த மாணவ மாணவியர்களின் எதிர்காலம் சிறக்க NCVT சான்றிதழ் உடன் கூடிய தொழிற் பயிற்சி கீழ்காணும் தொழிற் பாடப் பிரிவுகளில் அளிக்கப்படுகின்றது.

பயிற்சி வகுப்புகள் - அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை -

சேர்க்கை செய்யப்பட்ட எண்ணிக்கை - காலியிடம்

1. கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் (Computer)- 1 வருடப் பயிற்சி - (தகுதி-10ஆம் வகுப்பு தேர்ச்சி) - 48 - 10 - 38

2. குழாய் பொருத்துநர் (Plumber)- 1 வருடப் பயிற்சி - (தகுதி-8ஆம் வகுப்பு தேர்ச்சி) - 48 - 48 - 0

3. பொருத்துநர் (Fitter)- 1 வருட பயிற்சி - 2 வருடப் பயிற்சி - (தகுதி-10ஆம் வகுப்பு தேர்ச்சி) - 20 - 6 - 14 -

4. கம்மியர் மோட்டார் வாகனம் (Motor Mechanic Vehicle)- 2 வருடப் பயிற்சி - (தகுதி-10ஆம் வகுப்பு தேர்ச்சி) - 24 - 13 - 11.

5. மின்பணியாளர் (Electrician)- 2 வருடப் பயிற்சி - (தகுதி-10ஆம் வகுப்பு தேர்ச்சி) - 20 - 15 -5.

6. எலக்ட்ரானிக் மெக்கானிக் (Electronic Mechanic)- 2 வருடப் பயிற்சி (தகுதி-10ஆம் வகுப்பு தேர்ச்சி) - 24 - 10- 14 - மொத்தம் - 184 - 102 - 82

சென்னை பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளுக்கும் மாணவர்கள் சேர்க்கையில் முன்னுரிமை அளித்து, மீதி காலியாக உள்ள இடங்களுக்கு சென்னை மாவட்டத்தில் உள்ள பிற பள்ளிகளில் படித்த ஏழை, எளிய மாணவர்களை அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் விதிகளின்படி சேர்க்கை வழங்கப்படும். இந்தப் பயிற்சியில் சேர வயது வரம்பு 14 முதல் 40 வயது ஆகும். பெண்களுக்கு வயது வரம்பு கிடையாது.

பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் சிறப்பு அம்சமானது முற்றிலும் இலவச பயிற்சி அளித்து ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி முடிக்கும் பயிற்சியாளர்களுக்கு முன்னணி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்று தரப்படுகிறது. படிக்கும் போது தகுதியுடைய மாணவர்களுக்கு ஒரு மாதம் ரூ.5,000/- முதல் ரூ.10,500/- வரை சம்பளத்துடன் கூடிய பயிற்சி (Internship Training) தொழிற்சாலைகளில் அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் மாணவர்களுக்கு விலையில்லா நலத்திட்டங்களான இரண்டு செட் சீருடை, பஸ் பாஸ், பாடப்புத்தகம் மற்றும் வரைபடக்கருவிகள், பாதுகாப்பு காலணி, இருசக்கர மிதிவண்டி, பயிற்சி நேர இடைவெளியில் காலை, மாலை இருவேளை தேநீர், பிஸ்கெட், மதிய உணவு மற்றும் பயிற்சி காலத்தில் மாதந்தோறும் ரூ.750/- பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது.

2024-25ஆம் கல்வி ஆண்டிற்கு தொழிற் பயிற்சியில் சேர விண்ணப்பப் படிவத்தினை சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் இலவசமாக பெறலாம் அல்லது இணையதள முகவரி www.chennaicorporation.gov.in மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை கீழ்காணும் முகவரியில் நேரடியாக சமர்ப்பித்து சேர்க்கையினை பெறலாம். சேர்க்கைக்கான கடைசி நாள் 31.08.2024 ஆகும்.

**முகவரி:-**

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம்,

முத்தையா தெரு அருகில், லாயிட்ஸ் காலனி, ஐஸ் அவுஸ்,

இராயப்பேட்டை, சென்னை-14.

தொலைபேசி எண் : 044 - 2847 3117, 2951 5312, 70104 57571, 79049 35430

(பேருந்து நிறுத்தம்: ஐஸ் அவுஸ் காவல் நிலையம் அல்லது எல்லோ பேஜஸ். )

மேலும், மாணவர்கள் பயிற்சியில் சேரும்போது அசல் சான்றிதழ்களான பள்ளி மாற்றுச் சான்றிதழ், 10ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், சாதி சான்றிதழ் மற்றும் ஆதார் நகல் ஆகியவற்றின் வழங்க வேண்டும். குழாய் பொருத்துநர் (Plumber) பாடப்பிரிவுக்கு 8ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். நேரடி சேர்க்கையின் போது அரசு இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பாடப்பிரிவு ஒதுக்கீடு செய்து பயிற்சியில் சேருவதற்கான அனுமதி வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க, இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் அமைந்துள்ள வள்ளல் எஸ்.ஐ. அழகர்சாமி மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மாணவர் – மாணவிகளுக்கு இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், வட்ட செயலாளர் காட்டன், ஜி.சதிஷ்குமார், பள்ளித் தாளாளர் ஜி.உமாபதி, தலைமையாசிரியர் திருமதி. எஸ்.இந்துமதி, கல்விக்குழு செயலாளர் வி.பி.மோகன், கழக மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் என பலர் உடனிருந்தனர்.